தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveerarnaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

**6 வயதுப்பிரிவு**
(01.01.2014 – 31.12.2014 வரையில் பிறந்தோர்)

## தாய்மொழிக்கல்வி

ஓர் இனத்தின் அடையாளம் மொழி. மொழி அழிந்தால் இனம் அழிந்து போகும். அதனால் மொழியை அழியாது காக்க வேண்டும். அதற்கு நாம் தாய்மொழியைக் கற்க வேண்டும்.

வாழும் நாடுகளில் அந்நாட்டுக் குடியுரிமை பெற்றிருந்தாலும், நாம் யார் என்பதை எமது தாய்மொழியே வெளிக்காட்டுகிறது. எம்மைத் தமிழராக இனங்காட்டும் தாய்மொழியை மறப்பது தகுமோ?

தமிழராய் பிறந்த நாம், “தமிழ் படிக்கப் பிடிக்கவில்லை. அதனை எழுதப் படிக்கத் தெரியவில்லை” என்று கூறினால் அது எமக்கு இழுக்கு அல்லவோ?

தலைவர் மாமா காட்டிய வழியில், எம்மொழி காத்து, தாய்நாட்டை மீட்க, தம்மையே தந்த மாவீரர் ஈகங்களும், மக்களின் தியாகங்களும் வீண் போகலாமோ?

எனவே, நாம் எல்லோரும் தாய்மொழியைக் கற்போம். எம் தாய்நாட்டிற்கும் தாய்மொழிக்கும் காவலராய் நிமிர்வோம். எங்கு வாழ்ந்தாலும் தமிழராய் வாழ்வோம்.

நன்றி,

வணக்கம்.